இந்திரன் அய்யா - பா.ராமமூர்த்தி
முக நட்பினைக் கடந்தும் அகநட்பை என்றும் பேணுபவர். ஒவ்வொருநாளும் பெருஞ்சாளரத்தை நம்முன்னே திறந்துவிடுகிறார்...காலப்பெருவெளியில் சஞ்சரித்து அவரோடு பயணிக்க மனமுண்டோருக்கு கலையின் மீதான ஆவல் மேலும் விரிவுபெறும். அவருடைய எழுத்துகள், ஓவியங்கள், உரையாடல்கள், பயணக்கட்டுரைகள், முகநூல் பதிவுகள் யாவும் ஒன்றுசேர்த்து 1லட்சம் பக்கங்களில் உள்ளடக்கினால் பலநூற்றாண்டுத் தடங்களில் பயணித்த அனுபவம் பெறலாம். நிஜம். இவை சாத்தியப்பட பெருந்திரள் முன்னெடுப்பு அவசியப்படுகிறது. ஒவ்வொருவரும் ஒரு புத்தகம் எழுதலாம். நானும் இந்திரனும் என தலைப்பில்...நிச்சயம் நான் எழுதுவேன். ஒருகணத்தில் என் வாழ்க்கையை ஒற்றைச் சொல்லாடலில் மடைமாற்றியவர். இடற்பாடான இக்காலகட்டத்தைக் கடந்துசெல்ல இந்திரன் போன்றவர்களின் வார்த்தைகள் குறிப்பாக வாழ்க்கை மீதான அவதானிப்புகள். நம்பிக்கை மிகு பயணத்தின் மீதான எதிர்பார்ப்புகள், வாழ்க்கை ரஸங்கள்...என எண்ணற்றவைகள்...என்னைப்போல அவரவரர்களுக்கும் இந்திரன் அய்யாவின் மதிப்பீடும், அன்பும், விமர்சனங்களும் இருப்பதற்கான சாத்தியங்கள் உண்டு. இத்தனை உத்வேகத்துடன் இயங்கும் கலை, இலக்கிய ஆளுமைக்குள் அமிழ்ந்திருக்கும் பேரமைதிதான் மேலும் வியப்படையச் செய்கிறது...பெருஞ்சமுத்திரங்கள் சலசலப்பை விரும்பாது. இந்திரன் அய்யாவும் அவ்வாறே..” -- பா.ராமமூர்த்தி ,

2015 இல் “பயணி” இதழின் துணையாசிரியராக என்னிடம் அறிமுகமானவர். சிறந்த விஷயங்களைத் தேடிப் பறக்கும் ஒரு தமிழ்த் தேனி. ” கரீபியன் தீவுகளில் அலையும் தமிழனின் ஆன்மா” எனும் எனது பயணக் கட்டுரைக்காக அவர் எடுத்த முயற்சிகள் என்னை அவர்பால் ஈர்த்தன. அவர் கூறும் அன்பின் வார்த்தைகளைக் காண்கையில் ”என்னைத் தம்அன்பினால் நண்பர்கள் படைத்தனர். தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.” என்று ஒரு நிகழ்வில் நான் சொன்னதுதான் நினைவுக்கு வருகிறது.